

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2026), காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் – முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அவர்களின் "குறிஞ்சி நலம்" தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை தொடங்கி வைத்ததோடு, அதற்கான இலட்சினையை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி, மாநில மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன், டாக்டர் சொக்கலிங்கம் மற்றும் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர் – நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

திராவிட நாயகர் மு.க.ஸ்டாலினுக்கு நவம்பரில் பாராட்டு விழா!

பெரியார் அறிவுலகம் திறப்பு! திராவிட மாடல் ஆட்சியின் சாதனை!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பாராட்டு – அறிவிப்பு!

சென்னை, அக்.17

கோவையில் பெரியார் அறிவுலகம் திறந்திருப்பது திராவிட மாடல் அரசின் சாதனை தான் என்றும், அதற்காக திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நவம்பர் முதல் வாரத்தில் பாராட்டு விழா நடத்துவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் அறிக்கை வருமாறு:-

உயர் எண்ணங்கள் மலரும் சோலையாம்

தந்தை "பெரியார் அறிவுலகம்" என்ற நூலகத்தை உருவாக்கினார்

'திராவிட மாடல்' அரசின் நாயகர் மு.க.ஸ்டாலின்!

தொடங்கியபோதே பாராட்டினோம், இன்றும் பாராட்டுகிறோம்!



மேனாள் முதலமைச்சர் முடித்து வைத்ததை - இந்நாள் முதலமைச்சர் திறந்திருப்பது வரவேற்கத் தக்கது!

தமிழ்நாட்டு வரலாற்றில் மிகப்பெரிய வரலாற்றுப் பெருமைகளில் ஒன்றாக அமையும் 'பெரியார் அறிவு உலகம்' என்ற புதுமை பூத்துக் குலுங்கும் ஆய்வுக் களமாகவும், இளைய தலைமுறையினரும் எதையும் ஆர்வத்துடன் அறிந்துகொள்ள, அறிவு ஊற்றுப் பெருகிடும் "பெரியார் அறிவுலகம்" என்ற 300 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட திட்டமிடப்பட்டு தொடங்கப்பட்டது திராவிட மாடல் தி.மு.க. ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால்!

'எல்லோருக்கும் அறிவு' பரப்பிடும் வண்ணம்!

தந்தை பெரியார் பிறந்து, பொது வாழ்க்கையைத் தொடங்கிய கோவை மாவட்டத் தலைநகரில், நவீன தகவல் தொழில் நுட்ப ஆய்வு உள்பட பல்வேறு வசதி வாய்ப்புகள் 'எல்லோருக்கும் அறிவு' என்று பரப்பிடும் வண்ணம் 'திராவிட மாடல்' ஆட்சி திட்ட மிட்டது.

சாதனைச் சரித்திரம் படைத்தார், அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

கோவையில் பெரியார் அறிவுலகம், மதுரையில், கலைஞர் நூற்றாண்டு நூலகம், திருச்சியில், கல்வி வள்ளல் காமராசர் பெயரில் நூலகம், நெல்லையில், காயிதே மில்லத் பெயரிலான நூலகம், சேலத்தில், பாரதிதாசன் அறிவுலகம், கடலூரில், 98.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள அஞ்சலை அம்மாள் அறிவுலகம் என, புரட்சிக் கவிஞர் அவர்கள் விரும் பியபடி, 'அறிவை விரிவு செய், அகண்டமாக்கு, விசாலப் பார்வையால் விழுங்கு உலகத்தை' என்பதை செயலாக்கி, சாதனைச் சரித்திரம் படைத்தார், அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.விக்டர்ஹியூகோ சொன்னார், "ஒரு நூலகத்தைத் திறப்பது பல சிறைச் சாலைகளை மூடுவதற்குச் சமம்" என்று. நாம் நன்றி தெரிவித்து, பாராட்டி வரவேற்றோம்!

அந்த அறிவுப் பணியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டியபோதே நாம் நன்றி தெரிவித்து, பாராட்டி வரவேற்றோம்!

நேற்று (16.10.2026) தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜோசப் விஜய் திறந்து வைத்திருக்கிறார் - வரவேற்கத்தக்கதுதான்.

அதுவும் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைதான்!

பொதுவாக மக்களாட்சியில், ஒரு கட்சி முதலமைச்சர் கட்டி முடித்ததை அடுத்து வரும் முதலமைச்சர் திறப்பது வழமைதான் என்றாலும், ஓர் அடிப்படை உண்மை, மெட்ரோ ரயில் திட்டத்தை (ரூ.800 கோடிக்கு மேல் பெரிதும் மாநில அரசு நிதியின் சுமையிலேயே கட்டப்பட்டது) திறந்து வைத்தாலும், அதுவும் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைதான்!

காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கம், மகளிர் உரிமைத் திட்டம் எல்லாம் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகள் என்கிறபோது, முந்தைய முதலமைச்சரையும், ஆட்சியையும் தரந்தாழ்ந்து அவதூறுகளை அள்ளி வீசி, திசை திருப்பல்கள் அரசியல் அறமாகாது!

இரண்டு அணிகளுக்கான போராட்டம்!

அனைவரும் கல்வி, அறிவு பெறக்கூடாது என்ற ஒரு மேல்ஜாதி (ஆரிய) அணிக்கும், 'எல்லோருக்கும் எல்லாம்' என்னும் மக்கள் நல கொள்கை அணிக்கும்தான் இன்றைய போராட்டம் - அரசியலும்கூட!

"பெரியார் அறிவு உலகம்" என்ற தலைப்பே மிகவும் அற்புதத் தலைப்பு - மிகவும் தனித்தன்மையானது!

மண்டைச் சுரப்பை உலகு தொழும் என்றும், "உயர் எண்ணங்கள் மலரும் சோலை"யென்றும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தந்தை பெரியார்பற்றி ஆழ்ந்த பொருளோடு பாடியதற்கான எழில் வடிவம்தான் இந்தப் "பெரியார் அறிவுலகம்!"

உலகெங்கும் உள்ள பெரியாரிஸ்டுகள், பகுத்தறிவாளர்கள், திராவிட உணர்வாளர்கள், ஆய்வாளர்கள், அத்துணைப் பேரும் மகிழ்ந்து பாராட்டுகின்றோம். இதற்கு வித்திட்டு முடித்து, தேர்தல் அறிவிப்பு காரணமாக தள்ளிப் போன நிலையில், தற்போது அது கம்பீரமாக எழுந்து நிற்கிறது!

"திராவிட நாயகருக்கு, திராவிடர் கழகத்தின் சார்பில் - நன்றி, பாராட்டுப் பெருவிழா!"

இதற்காக நவம்பர் முதல் வாரத்தில், சென்னையில் "திராவிட நாயகருக்கு, திராவிடர் கழகத்தின் சார்பில் - நன்றி, பாராட்டுப் பெருவிழா!" என்று நடத்திடத் திட்டமிட்டுள்ளோம்.

'பெரியார் அறிவு உலகத்தினை' நேற்று திறந்து வைத்த முதலமைச்சர், அவரது அரசு, இந்த நூலகங்களின் வளர்ச்சிக்கு மேலும் உதவிடுவது அரசின் தலையாய கடமையாகும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழக முன்னாள் அவைத் தலைவரும், கழக மூத்த முன்னோடியுமான மறைந்த இர.செந்தில்நாதன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. மாலை வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தி குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மன்னை ப. நாராயணசாமி
அக்டோபர் 17 (1993)



'தஞ்சை மாவட்ட பெரியார்' என்று போற்றப்பட்டவர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது "பெரியார் விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(15.10.2026)



1. வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே கொண்ட சமுத்திரத்தில் கள்ளக்காதல் தகராறில் வழக்கறிஞரை அடித்து கொலை செய்த மூன்று பெண்கள் ...

2. மதுரை மாவட்டம் விரதனூர் அருகே முன்விரோதம் காரணமாக பைக்கில் சென்ற வாலிபர்களை விரட்டி விரட்டி வெட்டி கொடூர கொலை ஒருவர் பலி, மற்றொருவர் உயிர் ஊசல் ...

3. கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அருகே குளத்தில் மீன் பிடிப்பது தொடர்பாக ஏற்பட்ட தகராறு காரணமாக மீனவர் சரமாரியாக வெட்டி கொலை ...

4. விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் கூனம்பட்டி அருகே இரண்டாவது திருமணத்திற்கு பெண் கேட்டதால் தகராறு தந்தை சரமாரியாக அறிவாளால் வெட்டி படுகொலை ...

5. தேனி மாவட்டம் கம்பம் அருகே தனது இரு சக்கர வாகனம் மீது மோதிய



வாலிபர்களை கண்டித்ததால் ஜவுளிக் கடை வியாபாரி கத்தியால் குத்தி கொலை ....

6. விருதுநகர் மாவட்டம் கமுதி அருகே முன்விரோதம் காரணமாக மதுவை ஊற்றிக் கொடுத்து வாலிபர் சரமாரியாக வெட்டிக்கொலை ...

7. சென்னை ஆதம்பாக்கம் சாஸ்திரி நகரில் மது போதையில் கத்தியால் கழுத்தை அறுத்து கொல்ல முயற்சி ....

8. சென்னை வியாசர்பாடியில் வாகன சோதனையில் ஈடுபட்ட சப் இன்ஸ்பெக்டர் மற்றும் பெண் காவலரிடம் தகராறு செய்த ஆட்டோ டிரைவர் சிக்கினார் ...

9. கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே கட்சி நிர்வாகிகள் கூட்டம் முடிந்து வீடு திரும்பிய தவெக நிர்வாகியை வழிமறித்து சரமாரியாக அரிவாள் வெட்டு ...

10. ஆம்பூர் அருகே பெண்களின் புகைப்படங்களை மார்பிங் செய்து ஆபாசமாக சித்தரித்து இணையத்தில் வெளியிட்ட வாலிபர் சிக்கினார்...



11. சென்னை மேற்கு மாம்பலத்தில் நிதி நிறுவன அதிபர் வீட்டில் பூட்டை உடைத்து 15 சவரன் தங்கம் மற்றும் 5 கிலோ வெள்ளி பொருட்கள் பணம் கொள்ளை ....

12. சென்னை தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில் நடந்து சென்ற இன்ஜினியரிடம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் எனக்கூறி தங்கச் சங்கிலியை பறித்துச் சென்ற வாலிபர் சிக்கினார் ...

13. திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் துத்திப்பட்டு ஊராட்சி மேல் கன்றம்பள்ளியில் கமல் சிங் என்பவர் வீட்டின் பூட்டை உடைத்து ரொக்க பணம், ஒரு லட்ச ரூபாய் மதிப்பிலான டிவி, மின் ஓயர்கள் திருட்டு...

14. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கிளாங்காட்டூர் கிராமத்தில் பொது இடத்தில் மது அருந்தி கொண்டு இருப்பவர்களை கண்டித்த போலீஸ்காரரை உருட்டுக்கட்டையால் சரமாரியாக தாக்கிய கும்பல் ....

15. மதுரையைச் சேர்ந்த வில்வித்தை வீரர் மீது பொய்யாக கஞ்சா வழக்கு பதிவு செய்த பெண் சப்இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்க ஹை கோர்ட் உத்தரவு ....

16. தென்காசி மாவட்டம் திருவேங்கடம் அருகே வாகனம் நிறுத்துவதில் தகராறு: வாடகை கார் ஓட்டுநருக்கு அரிவாள் வெட்டு



17. கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடரும் அரிவாள் வெட்டு சம்பவங்கள். தோவாளையில் பட்டப்பகலில் செல்போன் கடைக்குள் புகுந்து உரிமையாளரை அரிவாளால் சரமாரியாக வெட்டியதால் பரபரப்பு

18. த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் ரீல்ஸ் மோகம் உச்சகட்டம் திருவண்ணா மலையில் பெட்ரோல் குண்டு வீசி ரீல்ஸ் வீடியோ எடுத்த நபரால் அதிர்ச்சி.



19. சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை ஆசைவார்த்தை கூறி ஏமாற்றிய தியாகு என்ற த.வெ.க. நிர்வாகி

20. வேலூர் மாவட்டம் காட்பாடியில் கூதாட்டத்தொழில் போட்டி காரணமாக இளைஞர் வெட்டிக் கொலை.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாதவரம் தெற்கு பகுதி 32 (ஆ) வட்டம் சூரப்பட்டு பகுதியில் வசிக்கும் மாவட்ட பிரதிநிதி டி.ரமணனின் சகோதரர் டி.ரமேஷ் அவர்கள் இயற்கை எய்தினார். அவரது திருஉடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், பகுதி செயலாளர் ஜி.துக்காராம், வட்ட கழக செயலாளர்கள் துரை ஸ்ரீராமுலு, சரவணன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் விஜயலட்சுமி ஆனந்த், ஆர்.எஸ்.மணி, டி. வெங்கடேசன், ஏழுமலை, பி.மணிவண்ணன், ஏ.சம்பத்குமார், புழல் சித்தர் சாமுவேல், த.பத்து பெருமாள், ச.மதன், புழல் ஜெயபிரகாஷ், வெங்கட், ஜசக், மற்றும் கழக இளைஞர் அணி தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.